**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3 தாராபுரம்**

**அ.வ.எண். 711/2023**

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6–ம் நாள் செவ்வாய்கிழமை **வா.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.V.ஜான்மினோ,B.A.,B.L., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கோவிந்தசாமி | தொழில் | : | |
| த/பெ | : | வீரப்பகவுண்டர் | கிராமம் | : | |
| வயது | : | | தாலுகா | : | |
| ஜாதி | : | | மாவட்டம் | : | |
| சமயம் | : | | | | |

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என் முதல் விசாரணை நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன், அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன். 22.04.2021 ஆம் தேதிய நானும், பிரதிவாதியும் செய்து கொண்ட கிரையம் உடன்படிக்கை அசல் வா.சா.ஆ.1, 29.02.2016 ஆம் தேதிய பிரதிவாதி என்னிடம் கொடுத்த, அவர் பெற்ற அசல் கிரைய ஆவணத்தின் ஜெராக்ஸ் நகல் வா.சா.ஆ.2 (வா.சா.ஆ.2 பிரதிவாதியால் வாதிக்கு கொடுக்கப்பட்டதல்ல என பிரதிவாதி தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டது), 29.07.2021 ஆம் தேதிய நான் தாராபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததற்கான இரசீது வா.சா.ஆ.3, 26.06.2023 ஆம் தேதிய நான் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.4, 07.07.2023 ஆம் தேதிய அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.5, 08.07.2023

ஆம் தேதி பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.6 தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒம்/-திரு.V.ஜான்மினோ,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.